உ

சிவசிவ

திருச்சிற்றம்பலம்



அமரர்

# திருவாட்டி தில்லையம்மா குட்டித்தம்பி

அவர்களின்

சிவபதப்பேற்றின்

# நினைவு மலர்

இராட்சத ஆனி

1975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

திருவாட்டி தில்லையம்மா குட்டித்தம்பி

தோற்றம்: 1902 மறைவு: 1975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Reminiscences

நினைவு கூருகிறோம்



அமரர் குட்டித்தம்பி, BARRISTER - AT - LAW

தோற்றம்: 21 - 10 - 1883 மறைவு: 01 - 09 - 1943

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

எனது அருமை அன்னை தில்லையம்மா குட்டித்தம்பி 10-06-75 செவ்வாய்க்கிழமை இரவு 4-40 க்குச் சிவபதப் பேறு எய்தினர்.

ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவிஎன்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தாரமும் கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

இந்தப் பாடல் பட்டினத்தார் பாடல். பட்டினத்தார் செத்தாரைப் போலே திரிந்த ஒரு செம்மல். செத்தாரைப் போலே திரிவதென்ருல் ஏதோ ஒரு இலகுவான காரியம் என்று எண்ணி விடக் கூடாது. அதனை ஒரு தனிக்கலை என்றுகூடச் சொல்லி விடலாம். அந்தக்கலை கைவந்த சீமாட்டி தில்லையம்மா குட்டித்தம்பி. ஆம்! அந்த அம்மையார் செத்தாரைப்போலே திரிந்தார்; ஆனால் செய்ய வேண்டியன எல்லாம் செய்தார். அதுதானே கீதை காட்டும் நெறி.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

ஒருவன் யாதொரு பொருளின் நீங்கினுல் அவன் அப் பொருளால் துன்பம் எய்துதல் இலன் என்பது இதன் பொருள். இதற்கு ஓர் உதாரணம் வேண்டும் என்ருல் அம்மையாரை சுட்டிக் காட்டிவிடலாம்.

அம்மையார் விளம்பரம் இல்லாது வாழ்ந்த கர்மயோகி. உள்ளத் தூய்மையுடன் பலனைப்பாராது பணி ஆற்றிய சீமாட்டி. விட்டுவிடப்போகுது உயிர் விட உடனே சுட்டுவிடப் போகின்ருர் சுற்றத்தார் என்ற நினைவு மீதூர சிவனை ஏத்திய செம்மை சான்ற அம்மையார் இன்று நம்மிடையே இல்லை.

கைப்பிடித்த கணவனைக் காலன் கொண்டுபோன பின் கைம்பெண்ணுக வாழ்வதுதான் எப்படி என்று அம்மையார் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டினர். கணவன் இறந்து 32 வருடங்கள் ஆகின்றன.

திருவெம்பாவையில் அம்மையாருக்கு இருந்த ஈடுபாடு சொல்லில் அடங்காது. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று அம்மையாரின் நெஞ்சில் இருந்த பக்தியினுல் வீரத்தினுல் அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்சவருவதும் இல்லை என்று தன்னை முற்ருக முழுதாக இறைவனிடமே ஒப்படைத்த பெருந்தகை தில்லையம்மா குட்டித்தம்பி.

அம்மையார் தேவாரம், திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி, பட்டினத்தார் பாடல் என்பனவற்றைத் தவருது படித்தார். அந்நினைவாக இந்நினைவு மலர் உருவாகிறது. படித்துப் பயன் பெற வேண்டுகிருேம்.

வணக்கம்

1975-07-10

குட்டித்தம்பி தியாகராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் காப்பு

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வளி வலமுறை இறையே.

## திருப்பள்ளியெழுச்சி

### திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருண் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணும்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆநந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றுயெனில் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னு
சிந்தனைக் கும்மரி யாய்எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலர்ந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப்பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டு கொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னு
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலிலும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழிப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ராஞய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் ரேமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவு மலரவ ஞசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

## திருவெம்பாவை

திருவண்ணுமலையில் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்தது

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம் மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமிதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனுர்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந் (து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணு மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருவாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னேங்கேள் வெவ்வேருய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினேங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்தனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாழ்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீருடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையிற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலப்பித் திருப்புருவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிர்சேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடி
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்; 20

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

நல்லாரிணக்கமும், நின்பூசை நேசமு(ம்) ஞானமுமே
யல்லாது வேறு நிலையுளதோ? அகமும் பொருளும்
இல்லாளும், சுற்றமு(ம்), மைந்தரும், வாழ்வும், எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே யிறைவா! கச்சியேகம்பனே!

ஊருஞ் சதமல்ல; உற்றார் சதமல்ல; உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல; பெண்டீர் சதமல்ல; பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல; செல்வஞ் சதமல்ல; தேசத்திலே
யாருஞ் சதமல்ல; நின்றாள் சதங்கச்சி யேகம்பனே!

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ?
அப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ?
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ?
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ?
முன்னை யெத்தனை யெத்தனை சன்மமோ?
மூடனாயடி யேனு மறிந்திலேன்;
இன்ன மெத்தனை யெத்தனை சன்மமோ?
என்செய்வேன்? கச்சி யேகம்ப நாதனே!

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி,
முத்தும் பவளமும் பூண்டோடியாடி முடிந்த பின்பு,
செத்துக் கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன? காண்கயிலா புரிக் காளத்தியே!

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண் டெனும்படி கேட்டு விட்டோ,மினிக் கேண் மனமே!
ஓடுண்டு, கந்தையுண், டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்டனடியார் நமக்குத் துணையுமுண்டே.

என்பெற்ற தாயாருமென்னைப் 'பிண'மென் றிகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் 'போ'வென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்;
உன்பற்றொழிய வொரு பற்றுமில்லை யுடையவனே!

விட்டு விடப் போகுதுயிர்; விட்டவுடனே யுடலைச்
சுட்டு விடப் போகின்றார் சுற்றத்தார் — பட்டதுபட்
டெந்நேரமுஞ் சிவனை யேத்துங்கள்! போற்றுங்கள்!
சொன்னே னதுவே சுகம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி குட்டித்தம்பி தில்லையம்மா

அவர்களின்

தேகவியோகத்தைக் குறித்த

இரங்கற் பாக்கள்

# நெஞ்சே நீ நினையாய்

## மக்கள் புலம்பல்

கண்ணில் மணியாய் ஒளிவிளக்காய் நின்று
மண்ணில் பிறந்து உரிமை பேணி
தன்னில் தனிப் பிறவி யெடுத்து உய்ந்தாய்
சொல்லில் அடங்குமோ உன் அன்பு.

## மருமக்கள் புலம்பல்

முகமலர்ந்து நின் பாதம் பேணப் பெற்றேன்
அகம் குளிர்ந்து மாமியென்று அழைத்திட்டால்
இகம் பார்த்து மனங் குளிரவைத்தாய்
சுகம் சொல்லி வரவழைக்க இனியாருண்டோ.

## சுற்றத்தார் புலம்பல்

உற்றாரைக் கண்டால் அன்பு முகங் காட்டி ஆதரித்து
கற்றாரைப்போல் சுடர் விளக்காய் நின்றாய்
பற்றாரைக் கண்டால் உளம் நெகிழ்ந்து
சொற்றாரையாய்ப் பொழிந்து எல்லோரையும் பேணினீரே.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

தேன்மொழியென்று அழைத்து ஆறுதல் கூறி
மலர்விழிபோல் உடல் அழகு மேவி
சிவகுமாரன், ஆனந்தன் என்று அழைப்பார் உண்டோ
மேதினியில் பாலகிருஷ்ணன், ராதை, ரதி, ரவி தவிப்பார்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் குட்டித்தம்பியும்

அன்புப் பாரியார்

அமரர் திருவாட்டி தில்லையம்மாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Cultured and Noble Lady

Since 01st September 1943, Mrs. C. K. Tambe lived as a widow until her death on 10th June 1975. I have known Mrs. Tambe for a very long time even when she was at No 31, 35th Street, Rangoon. She lived an exemplary life - with her beloved husband while in Burma.

When her husband travelled to Rangoon in May 1934 via Madras I met both of them. I have seen them travelling majestically in the old FORD car driven by his chauffeur.

During July 1936 when Mr. Kudde Tambe took his oaths and enrolled an Advocate of the Supreme Court of the Island of Ceylon, I saw Mrs. Tambe.

Mrs. Thambe was not a puzzle to anyone as she was honest. She was always of the opinion Truth alone triumphs not Untruth. She had infinite faith in God.

It could be boldly said that there is not one person who could raise his or her finger and proclaim that Thillaiammah had hurt the feelings of anybody or spoke ill-of any person. This bespeaks of her golden character and in-born qualities.

There was nothing more attractive in her than her modesty, nothing more shining than her shyness. She has handed over to us the radiance of her personality, the glory of her own tolerance, the magnificent epic of her character. She was a cultured and a noble lady hailing from a family of good stock and breed.

**By A Family Friend**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Glimpses of her husband

The Decennial Digst of Burma Rulings from 1923 — 1933 was the best publication brought out by the legal institution of Burma for which Mr. Tambe was the sole author. This was in June 1933.

## A Horoscopic Reflection

The late Mr. Kuddythamby was born on 21st October 1883, under the Royal sign Leo (Singha) lagna. His planetary positions astrologically were.

**Lagna** — *Sinha* **Mercury** — *exaltation in 2nd house*
**Venus** — *own house in 3rd.* **Sun** — *neecha in 3rd.*
**Ragu** — *in 3rd.* **Kethu** — *in 9th.* **Saturn** — *in 10th.*
**Guru** — *exaltation in 12th* **Mercury** — *neecha in 12th.*

He was born under Naksetra "Thiruvathirai" having a balance of 5676 days under Rahu Dasa ie from 21-10-1883 to 05-05-1899. The uchcha Guru Dasa started from 06-05-1899 to 11-03-1915. Sani Dasa Commenced from 12-03-1915 to 03-11-1933 The exalted Mercury Dasa which was the best period commenced from 04-11-1933 but unfortunately he succunbed to death on 01-09-1943 half-way under this Dasa. Tha uchcha Guru in 12th and uchcha Budda in 2nd fortified his lagna and he lived like a Prince all his life. Had the Bar-at-law survived the entire Buda Dasa until 1950, Thillaiammah would have seen her husband as a "Judge" of the Supreme Court of Ceylon. Mercury Dasa sub - period Venus saw Mr. Thambe at the helm of affairs. He was responsible for several law publications in Burma. He knew several languages and the command of the Burmese language was a phenomenon. Besides being a Municipal Councillor, he was the Patron of Burmese Associations. He amassed wealth during this Venus sub - period and attained fame.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He had a lucrative practice in Rangoon and was a legal Luminary in the Judicature. His Sani Dasa - Guru Bukhti from 1931 empowered the native (Mr. Tambe) to be in possession of Gems, brilliant Jewellary and Diamonds which he periodically presented them to close relatives. As Guru was Uchcha in Cancer his 12th house, Mr. Tambe was certain to attain "Moksha" when he departed on 01st September 1943.

**By Karma Yogi**

---

# A Retrospection

*High Court of Judicature*
*Rangoon*
*6th May 1932*

I have known Mr. C. K. Tambe, Barrister - at - Law, for many years. He has practised in this Court for over ten years, and has often appeared before me. He does his cases well and to the best of my knowledge and belief he is a man of excellent character.

**B H. Heald,**
**Judge**

---

*High Court of Judicature*
*Rangoon*
*29th August 1934.*

I have known Mr. C. K. Tambe certainly for over ten years. When I was practising at the Bar, I frequently come across him and since I have been in the Bench he has often appeared before me. I can testify to his ability as an advocate and to the fact that he always knows his cases. I regard him as an honourable member of the profession.

**A. H. Leach**
**Judge**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*High Court of Judicature*
*Rangoon*
*4th September 1934.*

I have known Mr. C. K. Tambe for over twenty years. When I was practising at the Bar, I often appeard in cases with Mr. Tambe as junior and had good opportunity to judge of his abilities. I always found him a painstaking and useful junior and formed a high opinion of his legal knowledge. He has appeared before me in several cases after my elevation to the Bench and has always impressed me with his knowledge of his cases and he has always maintained the traditions of the proffession. I regard him as an honourable member of the profession.

S. N Sen
Judge

---

*High Court of Judicature*
*Rangoon*
*6th September 1934*

I have known Mr. C. K. Tambe, Barrister-at-Law, an advocate of this Court since the time of my enrolment as an advocate of the Chief Court of Lower Burma in 1911, when he was preparing for the local pleadership examination. After he passed that Examination, he practised as a pleader and later passed the advocateship examination in due course and ultimately succeeded in being called to the Bar at the Middle Temple Throughout his career he has shown much grit and industry and has also compiled a useful digest of the decisions of this Court. He is a sound lawyer and a good advocate is a popular practitioner. He was for some time an elected member of the Municipal Corporation of the City of Rangoon and is a man of good repute and character.

**Mya Bu**
Judge

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13th August 1933

# Gleanings from the Press Opinion - Rangoon

## EXTRACT FROM RANGOON DAILY NEWS

The accuracy and fullness of the answers guaranteed by the author's qualification and long experience........ authoritative guide of this nature is just the thing wanted for the student preparing for the examination......... a suitable and reliable Companion — RANGOON DAILY NEWS.

——

## RANGOON GAZETTE

Mr. C. K. Tambe, Bar-at-law has compiled a very useful guide...... full and correct answers to the questions.... not only does it indicate the nature of the questions to be anticipated but it also give the answers in model form ........ in the action dealing with Buddhist Law, he has dealt with recent case law and cites the latest rulings ...... this renders this section of the book particularly valuable ...... the book is excellanetly printed and every student would be well advised to acquire it.

——

## THE RANGOON TIMES

Exhaustive and authoriative answers on all the Acts Codes Buddhist Law, etc., ...... will be found very useful for the candidate.

——

THE RANGOON MAIL — A good companion.

——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## An Anecdote

# A Legal "Vede - Mecum"

The first "Decennial Digest of Burma Rulings" has been brought out by Mr. C. K. Tambe, barrister-at-law. It is a digest of all the rulings of the Burma High Court and of the Privy Council on appeals from Burma. The digest contains the comparative Table (Paralel References) showing serially the pages of the Indian Law Reports, Rangoon series, which corresponding references of the Indian cases All-India Reporter, Burma Law Journal, Criminal Law Journal and other reports, Journals and Periodicals. Also indicated are codes which have been over ruled by dissented or distinguished from, or followed, subsequent decisions. The book is priced at Rs. 9/- and avilable from the author at No. 21, 35th Street, Rangoon. It should prove a vademecum to legal practitioners, judges, Magistrates and other judicial officers.

**13th August 1933**

---


# Snippets

In liberation, a woman becomes her own master-piece.

"It takes centuries of life to make a little history; it takes centuries of history to make a little tradition."

Hatred and prejudice are not born in us but are built into us. They are mental attitudes cultivated and not instinctive. They are the results of training and instruction.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*The Late*
**Mr. C. K. Tambe,** BAR-AT-LAW
*& Municipal Councillor*
*Rangoon, Burma.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயிற் கிடவாமல் பரமன் அடி சேர்பவர்கள் இயமனுக்குச் சவால் விடுபவர்கள். அவர்கள் சிவனுடன் இரண்டறக் கலப்பார்கள். அந்தத் தேசஸ் முகத்திலே ஒளிவிடும். எனது அருமை அன்னையாரின் உயிர் பிரிந்த பின்னும் முகத்திலே அந்த ஒளியையும் லட்சுமி கரத்தையும் காண முடிந்தது.

# நன்றி நவிலல்

அமரர் திருவாட்டி தில்லையம்மா குட்டித்தம்பி அவர்களின் மரணச் சடங்குகளிற் கலந்து கொண்டு உதவியவர்களுக்கும், மலர் வளையங்கள், அநுதாபச் செய்திகள் உதவிய பெருமக்களுக்கும், வேறு பல்லாற்றுலும் பேருதவி புரிந்த உற்ருர், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் எம் இதயம் கனிந்த நன்றி.

அமரர் திருமதி தில்லையம்மா குட்டித்தம்பியின்
குடும்பத்தார்.

*The members of the family of late*
*Mrs. Thillaiammah Kuddythamby*
*wish to express their deep appreciation and thankfulness to those who attended the funeral, sent Wreaths, and Messages of Condolenses. They also thank all relations and neighbours who assisted in numerous ways.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியார் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org